## ஜனவரி – 13 – ஞாயிறு

### ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா

**“என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்துணை மேன்மைமிக்கவர்! ” திபா 104 : 1**

### முதல் வாசகம் : ஏசாயா 40 : 1 – 5, 9 – 11

”ஆறுதல் கூறுங்கள் என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள்” என்கிறார் உங்கள் கடவுள். எருசலேமிடம் இனிமையாய்ப் பேசி, உரத்த குரலில் அவளுக்குச் சொல்லுங்கள் அவள் போராட்டம் நின்றுவிட்டது அவள் குற்றம் மன்னிக்கப்பட்டது அவள் தன் பாவங்கள் அனைத்திற்காகவும் ஆண்டவர் கையில் இருமடங்கு தண்டனை பெற்றுவிட்டாள். குரலொளி ஒன்று முழங்குகின்றது பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் பாழ்நிலத்தில் நம் கடவுளுக்காக நெடுஞ்சாலை ஒன்றைச் சீராக்குங்கள். பள்ளத்தாக்கு எல்லாம் நிரப்பப்படும் மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும் கோணலானது நேராக்கப்படும் கரடு முரடானவை சமதளமாக்கப்படும். ஆண்டவரின் மாட்சி வெளிப்படுத்தப்படும் மானிடர் அனைவரும் ஒருங்கே இதைக் காண்பர் ஆண்டவர்தாமே இதை மொழிந்தார். சீயோனே! நற்செய்தி தருபவளே, உயர்மலைமேல் நின்றுகொள்! எருசலேமே! நற்செய்தி உரைப்பவரே! உன் குரலை எழுப்பு, அஞ்சாதே! “இதோ உன் கடவுள்“ என்று யூதா நகர்களிடம் முழங்கு! இதோ என் தலைவராகிய ஆண்டவர் ஆற்றலுடன் வருகின்றார் அவர் ஆற்றலோடு ஆட்சி புரிய இருக்கிறார். அவர்தம் வெற்றிப் பரிசைத் தம்முடன் எடுத்து வருகின்றார் அவர் வென்றவை அவர்முன் செல்கின்றன. ஆயனைப்போல் தம்மந்தையை அவர் மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார் அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார் சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார். ”

**பதில்பாடல் :** என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு

### இரண்டாம் வாசகம் : தீத்து 2 : 11 – 14, 3 : 4 - 7

அன்பிற்குரியவரே! மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது. நாம் இறைப்பற்றின்மையையும் உலகுசார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்துக் கட்டுப்பாட்டுடனும் நேர்மையுடனும் இறைப்பற்றுடனும் இம்மையில் வாழ இவ்வருளால் பயிற்சி பெறுகிறோம். மகிழ்ச்சியோடு எதிர்நோக்கியிருப்பது நிறைவேறும் எனக் காத்திருக்கிறோம். நம் பெருமைமிக்க கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப்போகிறது. அவர் நம்மை எல்லா நெறிகேடு களிலிருந்தும் மீட்டு, நற்செயல்களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாகத் தூய்மைப்படுத்தத் தம்மையே ஒப்படைத்தார். நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனித நேயமும் வெளிப்பட்ட போது, நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாகத் தம் இரக்கத்தை முன்னிட்டு, புதுப் பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார்.

அவர் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தூய ஆவியை நம்மீது நிறைவாகப் பொழிந்தார். நாம் அவரது அருளால் அவருக்கு ஏற்புடையவர்களாகி, நாம் எதிர்நோக்கி இருக்கும் நிலைவாழ்வை உரிமைப்பேறாகப் பெறும் பொருட்டே இவ்வாறு செய்தார்.

### நற்செய்தி : லூக்கா 3 : 15 – 16, 21 – 22

அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எல்லாரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். யோவான் அவர்கள் அனைவரையும் பார்த்து, ”நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன் ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது வானம் திறந்தது. தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, ”என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

**தியானம்:** இறைமகன் இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவை இன்றைய நாளில் அன்னையாம் திரு அவை நினைவு கூருகின்றாள். இறைமகன் இயேசுவின் திருமுழுக்கின்போது, வானம் திறக்கப்பட்டு பரிசுத்த ஆவி இறங்கியதோடு, “என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று ஒருகுரல் ஒலித்ததனை (லூக்கா3:22) இறைமகன் இயேசுவின் இவ்வுலக வாழ்வின் திருப்பு முனையாக, அவரது பகிரங்க பணிவாழ்வின் வெளிப்படுத்தலாக இறையியலாளர்கள் கருதுகின்றார்கள். இன்றைய நாளிலிருந்தே “நாசரேத்து ஊரிலிருந்து வந்தவரான”..... “தச்சன் சூசையின் மகன்” எனக்கருதப்படவரது வாழ்வில் புதுமைகள், அற்புதங்கள், அதிகாரமிக்க போதனைகள் மட்டுமல்ல, பாவத்தை வென்று சாத்தானை அடக்க அதிகாரமனைத்தும் ஆரம்பிக்கப்பட்ட நாளாகக் கருதப்படுகின்றது. அப்படியாயின் எமது திருமுழுக்கின் போது உண்மையில் என்ன நடந்தது? என நாம் அங்கலாய்க்கலாம். எமது திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனங்கள் வழியாக இறைமகன் இயேசுவோடு ஒன்றிணைக்கப்பட்டதுடன், வல்லமை பொருந்திய தூய ஆவியின் அதிகாரம் எமக்கும் வழங்கப்பட்டுள்ளது. இறைமகன் இயேசு மீதிறங்கிய அதே ஆவியானவர் எம்மீது இறங்கி, எம்மிலிருந்து செயற்படுவதோடு ஒவ்வொருவரையும் தமது கருவியாகப் பயன்படுத்த விரும்புகின்றார். இதனையே இன்றைய முதல்வாசகத்தில் ஏசாயா தீர்க்கதரிசி “ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன்.” (ஏசாயா42:6-7) என்கிறார். இறைமகனது திருமுழுக்கின்போது திறக்கப்பட்ட அதே வானம் எமக்காகவும் திறக்கப்பட்டுள்ளது என நம்புவோம். “என் அன்பார்ந்த மகன் (மகள்) நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்ற குரல் எமக்காகவும் ஒலிப்பதற்கேற்ப பரிசுத்தமாக நாம் வாழாவிடினும் அப்படி வாழுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள முயற்சிப்போம். ஏனெனில் பரிசுத்த வாழ்வை நோக்கி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இறைவனது பார்வையில் பல்லாயிரம் அடிகளாகக் கருதப்படும்.